
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1238

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

62

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

1978 -ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் போராட்டத்தைத் தொடங்கிய நிலையில், திண்டுக்கல்லில் ஏப்ரல் 8-ஆம் தேதி, நாராயண சாமி நாயுடு கைதுசெய்யப்பட்டார். மாநிலச் செயலாளர் பாலசுப்பிரமணியமும் கள்ளக் குறிச்சியில் கைதுசெய்யப்பட்டார். அந்தக் கைதைக் கண்டித்து, வேடசந்தூரில் ஆயிரக் கணக்கான விவசாயிகள் திரண்டனர். அவர்களைக் கலைக்க, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. பதற்றம் அதிகரித்த நிலையில், காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. காசிப்பாளையம் சுப்ரமணியம், அய்யாகவுண்டன்பட்டி சின்னசாமி, விடுதலைப் பட்டி சின்னசாமி, நாவலூர் நாச்சிமுத்து உள்ளிட்ட ஐந்து விவசாயிகள் உயிரிழந்தனர்.

11-ஆம் தேதி, வேலூர் மாவட்டம் ஒடுகத்தூர், சாணார்பட்டி உள்ளிட்ட பகுதி களிலும் துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன. பலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர். தமிழ்நாடு முழுவதும் இராணுவம் குவிக்கப்பட்டது. இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட இராணுவ தடியடியும் துப்பாக்கிச் சூடும் மட்டுமல்ல. அதற்கு முன்பே, அவர்கள் மனத்தில் காயங்களை ஏற்படுத்தியிருந்தன, அரசின் ஜப்தி நடவடிக்கைகள். விவசாயக் கடன் பாக்கிக்காக வீடுகளில் இருந்த வானொலிப்பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுவர்க் கடிகாரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. எருமை மாடுகள் ஜப்தி செய்யப்பட்டன. வாழ்வாதாரமாக இருந்தவை, அரசின் வசூல் நடவடிக்கைகளுக்குப் பலியான நிலையில், விவசாயிகள் போராட்டக் களத்துக்கு வந்துவிட்டனர்.

1972-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக் காலத்திலும் மின் கட்டண உயர்வு காரணமாக, நாராயணசாமி நாயுடு அவர்கள் விவசாயிகளைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபட்டபோது, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை உணர்ந்த கலைஞர், அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்திக் கட்டண சீர்திருத்தம் செய்ததோடு, விவசாயிகளின் பிற கோரிக்கை களையும் நிறைவேற்றிவைத்தார். ஆனால், 1978-இல் நிலைமை வேறுவிதமாக இருந்தது.

"இந்தப் பிரச்சினையில், மேலும் அரசு

## புதிய காவிரி நடுவர் மன்றம் ஏன் அவசியம்?

மேகதாது அணைக்கு எதிரான தமிழ்நாடு அரசின் தீர்மானத்தில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடுத்த திருத்தம் தொடர்பாக, அ.தி.மு.க., பா.ம.க., சி.பி.எம். போன்ற கட்சியினர் குழப்பத்தை ஏற்படுத்திவருகிறார்கள். 'புதிய நடுவர் மன்றம் அமைப்பது கூடாது' என்றும் பேசி வருகிறார்கள். இதுதொடர்பாக பதிவிட்டுள்ள யூடியூபர் யாசிர், "2018-இல் வந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பில், காவிரிப் படுகை அணைகள் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் மேகதாது இல்லை. எனவே, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப் போல 'புதிய நடுவர் மன்றம்' அமைப்பதே சரியானது. இவர் சொல்வதைப் போல உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது. 15 வருடத்திற்குப் பேச முடியாது என்றால், எப்படி ஒன்றிய அரசு திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடகாவிற்கு ஒப்புதல் கொடுத்தது? உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கும்போது, எதனால் திட்ட அறிக்கை தயார்செய்ய கர்நாடகாவிற்குத் தடை இல்லை என்று 2025-இல் உச்ச நீதிமன்றம் அனுமதி கொடுத்தது?

இவர் சுட்டிக்காட்டும் உச்ச நீதிமன்றம், தீர்ப்பு கொடுத்த பின்புதான் ஒன்றிய நீர்வளத் துறை, மேகதாது அணை கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்க, கர்நாடக அரசுக்கு அனுமதி கொடுக்கிறது. இதை எதிர்த்து, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போடுகிறது. அதில், 2025-ஆம் ஆண்டு 'மேகதாது அணை கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்க எந்தத் தடையும் இல்லை' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்துள்ளது. இந்தத் தீர்ப்பை மறு சீராய்வு செய்ய, மீண்டும் மனு போட்டது தமிழ்நாடு அரசு. ஆனால், உச்ச நீதிமன்றம் நம்முடைய மனுவை, இந்த மாதம்தான் மீண்டும் தள்ளுபடி செய்தது. 2025-லேயே உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால்தான், மேகதாது என்பது புதிய பிரச்சினை. எனவே, அது குறித்து விவாதிக்க வேண்டும் என்றால், புதிய நடுவர் மன்றம்தான் அமைக்க வேண்டும் என்று தி.மு.க. அரசு கடிதம் எழுதியது. அது நமக்கு சாதகமானது. இவை எதுவுமே தெரியாமல் பேசியுள்ளார், தோழர் சண்முகம்" என்று பதிவிட்டுள்ளார்.



# அரசின் காட்டாட்சியும்... விவசாயிகளோடு நின்ற கலைஞரும்...

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில், 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் எவ்வளவு முக்கியமானதோ, அதேபோல 1978-ஆம் ஆண்டு நடைபெற்ற விவசாயிகள் எழுச்சியும் முக்கியமான அத்தியாயமாகும். அப்போதுதான், 'மிசா' என்கிற பெரும் நெருக்கடியில் இருந்து கழகம் மீண்டு வந்தது. எம்.ஜி.ஆர். என்கிற கவர்ச்சி அலையில் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரம் கைமாறி இருந்தது. அப்படியான சூழலில் நடைபெற்ற ஒரு வீரம் செறிந்த போராட்டம், 1978-ஆம் ஆண்டு நடைபெற்ற விவசாயிகளின் போராட்டம்.

1977-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அரசு, விவசாயிகளின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, வசூல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டத் தொடங்கியது. மின் கட்டண உயர்வு, கூட்டுறவுக் கடன் வசூல், நிலவரி, ஜப்தி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. 'ஏழைப் பங்காளர்' என்று சொல்லிக்கொண்டவர், விவசாயிகளுக்குப் புதிய நெருக்கடிகளை அளிக்கத் தொடங்கியது, கிராமப்புறங்களில் கடும் அதிருப்தியை உருவாக்கியது. இந்த நிலையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு தலைமையில், ஒன்பது அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன.

### கோரிக்கைகள் என்ன?

மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். விவசாயக்கடன் வசூலைத் தள்ளிப்போட வேண்டும். வரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை களை நிறுத்த வேண்டும். விவசாயிகளின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க வேண்டும். இவை எந்த ஒன்றும் அன்றைய ஆட்சியைக் கவிழ்க்கும் அரசியல் கோரிக்கைகள் அல்ல. விவசாயிகள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கைகள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், எம்.ஜி.ஆர். அரசு அந்தக் கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தை மூலம் அணுகவில்லை. மாறாகக் கைது, தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடு என்கிற வகையில் பதில் அளித்தது.

வாகனங்கள் சாலைகளில் வலம் வந்தன. தமிழ்நாட்டில் நடப்பது ஜனநாயக ஆட்சியா? ராணுவ ஆட்சியா? என மக்களுக்கே குழப்பம் ஏற்படும் வகையில், ஆட்சியின் நடவடிக்கைகள் இருந்தன.

அந்தப் போராட்டம் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர், 'நெஞ்சுக்கு நீதி' நூலில் விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார்.

"விவசாயிகளின் போராட்டத்தை, அரசு உரிய நேரத்தில் அக்கறையுடன் கவனித்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது" என்று குறிப் பிட்டுள்ளார். விவசாயிகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தாமல், அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிக்காமல், அடக்குமுறையைக் கையில் எடுத்ததே பிரச் சினையைப் பெரிதாக்கியதாக அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

அதிலும் முக்கியமாக, அந்தப் போராட் டத்தின் பின்னணியில் தி.மு.க. இருப்பதாக ஆட்சியாளர்கள் குற்றம் சுமத்தி இருக்கின்றனர். அதற்குப் பதிலளித்த கலைஞர், "கழகம் எந்தப் போராட்டம் நடத்தினாலும், முன் கூட்டியே அறிவித்து அறப்போராட்டமாக நடத்தும் என்பது நாடறிந்த உண்மை" என்று அன்றைக்குப் பதிலளித்துள்ளார்.

### வாழ்வாதாரப் போராட்டம்

இந்தப் போராட்ட வரலாற்றில் அதிகம் பேசப்படாத ஒரு உண்மை உள்ளது. விவசாயிகளைப் போராட்டத்திற்குத் தள்ளியது பிடிவாதம் காட்டுவதும், கௌரவப் பிரச்சினை யாகக் கருதுவதும் திசைதிருப்புகின்ற முறையில் எதிர்க்கட்சிகளின்மீது அரசியல் நோக்குடன் பழி சுமத்துவதும் வருந்தத்தக்கது. விவசாயிகளின் போராட்டம், திடீரெனக் குமுறி எழுந்தமைக்கும் அதைத் தடுப்பது தவிர்க்க முடியாமல் போனதற்கும் என்ன காரணம் என்பதையும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில், அரசின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது என்பதையும் ஆராய்ந்து நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்ற வகையில், ஒரு நீதி விசாரணைக் குழுவுக்கான ஏற்பாட்டை அரசாங்கம் உடனடியாகச் செய்திட வேண்டும். அந்தக் குழுவில் ஒரு நீதிபதியும், பொதுமக்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும்" என்றும் அறிக்கை வெளியிட்டார் கலைஞர்.

கழகத்தின் சார்பில் ஓர் ஆய்வுக்குழுவை அமைத்துப் போராட்டப் பகுதிகளுக்கு அனுப்பினார் கலைஞர். அந்தக் குழு தமது அறிக்கையில், அரசின் அடக்குமுறையே போராட்டத்தைத் தீவிரப்படுத்தியதாகக் குறிப்பிட்டது. மேலும், உயர் நீதிமன்ற நீதிபதி மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்றும், கைதுசெய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கழகம் வலியுறுத்தியது.

இந்த வரலாற்றை, ஏன் நினைவுபடுத்த வேண்டும் எனக் கேள்வி எழலாம். ஏனெனில், தமிழ்நாட்டின் அரசியல் என்பது வெறும் தேர்தல் அரசியல் அல்ல. 'மொழி உரிமை', 'மாநில உரிமை', 'சமூக நீதி', 'விவசாயிகள் உரிமை' ஆகியவற்றின்மீது கட்டமைக்கப்பட்ட அரசியல். 1965-ஆம் ஆண்டு, மொழி உரிமையில் மாணவர்களுடன் நின்ற இயக்கமே, 1978-ஆம் ஆண்டு விவசாயிகளுடனும் நின்றது. அதிகாரத்தின் பக்கத்தில் அல்ல; பாதிக்கப்பட்ட மக்களின் பக்கத்தில் நின்றது. அதிகாரத்தில் இருந்தபோதும் பாதிக்கப்பட்டவர்களின் பக்கமே நின்றார் கலைஞர். அப்படித்தான் வந்தது, 'விவசாயத்துக்கு விலையில்லா மின்சாரம்' திட்டம்.

...தொடரும்

> "தமிழ்நாட்டின் அரசியல் என்பது வெறும் தேர்தல் அரசியல் அல்ல. 'மொழி உரிமை', 'மாநில உரிமை', 'சமூகநீதி', 'விவசாயிகள் உரிமை' ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்பட்ட அரசியல்."

## ஃப்ளாஷ்பேக்



பாலசுப்பிரமணியன்





### மணவிழாவில் தலைவருடன்...

1993-ஆம் ஆண்டு பொள்ளாச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குடும்ப விழாவாக நடைபெற்ற மண விழாவில் பேராசிரியர், ஆற்காட்டார் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர். அப்போது, ஆனைமலை ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவர் அவர்களிடம் ஒரு நோட்டை அளித்து, அவரிடம் கையெழுத்துப் பெற்று மகிழ்ந்தேன். மணவிழா முடிந்து தலைவர் புறப்படும் வரை, அவரைப் பார்த்துக்கொண்டே இருந்தது மறக்க முடியாத நினைவு.

– **பாலசுப்பிரமணியன்,**
**ஆத்து பொள்ளாச்சி,**
**ஆனைமலை, கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### வலிமை பெற்ற உன்னத அமைப்பு!

1952-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று, 'நம் நாடு' இதழில் கழகத்தின் செல்வாக்கு குறித்து எழுதினார், பேரறிஞர் அண்ணா. "எந்த இயக்கமும் பெற முடியாத செல்வாக்கும் சிறப்பும் பெற்று விளங்குகிறது திராவிட முன்னேற்றக் கழகம். நேரமும் சந்தர்ப்பமும் கிடைத்தால், ஜனநாயக முறைகளுக்கு உட்பட்டு ஆளும் கட்சியை அகற்றி, ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய வலிமையும் வாய்ப்பும் பெற்ற உன்னத அமைப்பாகும்" என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900